[1969 பிப்ரவரி 24

திரு. எம். ஆர். கண்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகளில் தனியார்கள் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். அந்த நிலம் அவர்களுக்கு உரிமையாக்கப்படாததால் அவர்கள் தொழில் வளர்ச்சிக்காக அந்தக் கட்டிடத்தை வைத்து கடன் வாங்க முடியவில்லை. இந்த நிலைமையை மாற்றி அமைத்து, அவர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு, அந்த நிலத்தை அவர்களுக்கு விற்பனை செய்வதற்கு வழி வகை செய்ய சர்க்கார் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

அண்ணமங்கலம் பெரிய ஏரி

* 45 வினு.—**திரு. ரா. ரா. முனுசாமி** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அண்ணமங்கலம் கிராமத்தில் உள்ள பெரிய ஏரியை, தூர்ந்துவிட்டபடியால், ஆழப்படுத்த உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) அவ்வித செயற்குறிப்பு ஏதுமில்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

மஞ்சமலை ஓடைத் திட்டம்

* 46 வினு.—**திரு. பி. எஸ். மணியன்** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வலையபட்டி அருகில் மஞ்சமலை ஓடைத் திட்டம் என்னும் அணைக்கட்டுக்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்குக் காலதாமதம் ஏற்படுவதன் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. பி. எஸ். மணியன் : இது போன்ற அணைக்கட்டு திட்டங்களில் ஒரு டன் உற்பத்திக்கு ரூ. 3,000-க்குக் குறைவாக செலவு செய்யவேண்டும் என்ற அரசாங்கத்தின் சட்டம் பல வருடங்களாக இருந்துகொண்டுவருகிறது. இது போன்ற நல்ல திட்டங்கள் பல ஓவர்-எஸ்டிமேட் என்ற காரணம் காட்டப்பட்டு, கைவிடப்படுகின்றன. இப்பொழுது உள்ள நிலவரத்தை ஒட்டி, ஒரு டன் உற்பத்திக்கு ரூ. 5,000 அல்லது ரூ. 6,000 செலவு செய்வதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1969 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்ட அணைக்கட்டு கட்டுவதற்கான திட்டம் இல்லை. நிலக்கோட்டை வட்டத்தில் வளையப்பட்டி கிராமத்தில் மஞ்சமலை ஓடையின் குறுக்கே ஒரு புதிய குளத்தை வெட்டுவதற்கான திட்டத்திற்கு மதிப்பீடும், வரைபடங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.15 லட்சத்தில் இந்தப் பாசனத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

Bridge across Arasalar at Sakkottai.

* 47. Q.—THIRU N. KASIRAMAN: Will the **Hon. the** Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Regulator-*cum*-Road Bridge at Sakkottai, south of Kumbakonam Municipal limits, across the Arasalar is in safe condition; and

(*b*) if not, whether there is any proposal to repair and widen it?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) ஆம்.

(இ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்: இந்தப் பாலமானது 1967-ம் வருடம் வந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, திறக்கப்படாமல் அதே நிலையில் இருக்கிறது. அதைச் செப்பனிடுவதற்கும் அது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதினால் அந்தப் பாலத்தை அகலப் படுத்துவதற்கும் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இல்லை. பாலத்தை விரிவுபடுத்துவதற்கான உத்தேசம் தற்சமயம் இல்லை.

நெய்வேலியில் தொழிலாளர் போராட்டம்

*48 **வின.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் 1967 ஜூன், ஜூலையில் தொழிலாளர் போராட்டம் நடந்தது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம். நெய்வேலியிலுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழக நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் 17—7—1967 அன்று வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) பூரிப்பூதியம், அகவிலைப் படி முதலியவை வழங்குவது குறித்து மூன்று தொழிலாளர் சங்கங்கள் 1967-ம் ஆண்டின் முற்பகுதியில் 19 கோரிக்கைகள் அடங்கிய பட்டியலைக் கொடுத்தன.